திரு. ஆ. நல்லசிவன் : 10 வருடங்களுக்கு மேலாக 10 லட்சம் ரூபாய்க்கு மேல் அரசுப் பணம் அதற்காகச் செலவிடப்படுகிறது. அதை அரசே ஏன் 'டேக்-ஓவர்' பண்ணக்கூடாது? இதை முதலிலேயே செய்திருக்கலாம் அல்லவா? இவ்வளவு அரசுப் பணம் செலவிடும் நிலையிலும் கூட நிர்வாகம் நினைத்தால் அவர்கள் கைவசம் வைத்துக்கொள்ளலாமென்ற நிலைமை இருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு பத்திரம் பதிவு செய்தல் போன்ற பணிகளை எல்லாம் வேகமாகச் செய்திருக்கிறோம். இது 1970-ல் நடைபெற்றது. ஆனால் 1977-ல் இருந்து நாங்கள் சில காரியங்களைச் செய்திருக்கிறோம். இப்பொழுது அவர்கள் மானியத்தை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

Thiagarajar College of Engineering, Madurai.

* 111 Q. THIRU P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether thirty seven students of the Thiagarajar College of Engineering, Madurai, were suspended in connection with the murder of two other students of the same college;

(*b*) whether thirty five of the said students have been totally acquitted by the Sessions Court and whether they have thereupon applied to the Government for transfer to some other College of Engineering with permission to resume their studies there; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 30—3—1981 அன்று மதுரை தியாகராயர் பொறியியற் கல்லூரியில் இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 37 மாணவர்கள் கல்லூரியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டார்கள்.

(இ) மற்றும் (உ) இவர்களில் இருவருக்கு நீதிமன்றத்தால் ரூ. 100 அபராதம் விதிக்கப்பட்டது. பிறர் விடுதலை செய்யப்பட்டனர். இந்த 37 பேரில் 9 பேர் இறுதியாண்டு மாணவர்கள். அந்த 9 பேரும் கல்லூரியில் தொடர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளனர். மீதி 28 மாணவர்களில் 22 பேர் காரைக்குடி அழகப்பா பொறியியற் கல்லூரிக்கு மாற்றப்பட்டு ஏற்கனவே சேர்ந்து விட்டனர். 3 பேர் சேலம் அரசுப் பொறியியற் கல்லூரிக்கும் 3 பேர் கோவை அரசினர் பொறியியற் கல்லூரிக்கும் மாறுதல் செய்யப்பட்டுள்ளனர்.

டாக்டர் இரா. சனார்த்தனம்: அந்த மாணவர்கள் மேலும் படிப்பைத் தொடர அரசு செய்த உதவிக்கு நன்றி. இதுபோல் பல கல்லூரிகளில் மாண வர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறபோது, மாணவர்கள் மறு ஆண்டு கல்லூரி களில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்கிற நிலை இல்லை. பல கல்லூரி களில் நடவடிக்கை எடுக்கும்போது, இறுதி ஆண்டு மாணவர்களைப் பொறுத்த வரையில், அவர்கள் படிப்பைத் தொடர முடியவில்லை. ஆகவே அப்படிப் பட்டவர்களை அடுத்த ஆண்டு அதே கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிற நிலை அல்லது வேறு கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளும் நிலை ஏற்படுத்தப் படுமா? அதற்கேற்ற வகையில் அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நடவடிக்கை என்பது தவறு செய் திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் எடுக்கப்படுகிறது. தவறு செய்தால், அதனால் ஏற்படுகிற விளைவுகளை அவர்கள் அனுபவிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. பொதுவாகவே யார் மீதாவது வேண்டு மென்றே நடவடிக்கை எடுப்பதில்லை. தவறு செய்திருப்பதாக நிரூபிக்கப் பட்டாலோ, தெரிந்தாலோ, குற்றச்சாட்டுகளை ஏற்று ஒருமுறை தண்டனை வழங்கினால், அதற்கு மேலும் அவர்களை பழிவாங்காமல் தேவையான உதவி களைச் செய்துதான் வருகிறோம்.

Working Days

* 112. Q.—THIRU P. R. THOMAS, THIRU S. MUTHUSAMY, THIRU C. R. LAKSHMIKANDHAN AND SELVI A. LEELAVATHI: Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether the Tamil Nadu Graduate and Post-Graduate Teachers' Association has made an appeal to the Government on 4th April 1982 not to increase the number of working days from 200 to 220 and to extend the earned leave benefit to the Teachers in the Recognised Schools in Tamil Nadu; and

(b) if so, the action taken thereon?